ஆகவே பணம் ஒதுக்கீட்டிலே எந்தப் பிரச்சினையும் கிடையாது. நீதிமன்றத் தடையின் காரணமாகத் தான் பிரச்சினை இருக்கிறது. அதுவும் விரைவிலே களையப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 374, திரு. ப. கலியபெருமாள், இருக்கையில் இல்லை. திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

374—

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணியாளர்களை நியமித்தல்.

11430—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணிபுரிய தேவையான ஆட்களை தேர்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தேர்வுக் குழுவை அரசு அமைத்துள்ளது. உள்ளூர் தமிழ் தினசரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்து அதன் மூலம் விண்ணப்பம் செய்யும் நபர்களையும், நியாயவிலை கடைகள் செயல்படும் கிராமத்தைச் சார்ந்தவர்களின் பட்டியலை வேலை வாய்ப்பகங்கள் மூலம் பெற்று, அப்பட்டியலில் உள்ள நபர்களையும், இக்குழு நேர்முகத் தேர்வு நடத்தி, தேர்வு செய்கிறது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்கள் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணியிலமர்த்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த தெளிவான விளக்கத்திற்கு முதலில் நன்றி சொல்கிறேன். தற்போது நியாய விலைக்கடைகள், அங்காடிகளில் எல்லாம் ஒரு பணியாளர் இருந்து கொண்டு அவரே அளந்தும் பொருள்களைக் கொடுக்கிறார். அதே போல ரசீதும் அவரே போட்டுக் கொண்டிருக்கிறார். அவர்கள் தாங்களாகவே ஒருவரை வேலைக்கு அமர்த்திக்கொண்டு அவரை வைத்து அந்த வேலைகளை வாங்கிக்

1993 ஏப்ரல் 16]

கொண்டிருக்கிறார்கள். கேட்கின்றபோது நாங்கள் தான் அவரை இங்கே போட்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றும் ஒரு உதவியாளரை அங்கே ஏற்படுத்திக்கொடுத்து, அந்த நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகின்ற எழுத்தருக்கு உதவிகரமாகவும், அதைப்போல அளந்து கொடுப்பது போன்ற வேலைகளை எல்லாம் செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மாபெரும் திட்டத்தை வைத்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற 22 ஆயிரம் நியாய விலைக் கடைகளில் 15 ஆயிரம் கடைகளுக்கு மேல் நஷ்டத்தில் நடக்கின்றன. இப்போது கொடுக்கப்படுகின்ற சம்பளம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆரம்பக் காலத்தில் போன ஆட்சியில் ''செய்வதை சொல்வோம், சொல்வதைச் செய்வோம்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள். 500 ரூபாய் என்று அறிவித்துவிட்டு அரசாங்கம் போய்விட்டது. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியில் தான் 500 ரூபாய் சம்பளத்தை சென்ற ஆண்டு ஏற்றிக் கொடுத்து இந்த ஆண்டு அந்த 500 ரூபாயை 600 ரூபாயாக மாற்றிக் கொடுத்திருக்கிறோம். அந்த சம்பளம் கொடுப்பதற்கு கூட பல கடைகளில் நிலைமை சரியாக இல்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நஷ்டத்தில் நடக்கின்றன. ஆகவே, இன்னொரு ஆளை வைப்பது என்பது சிரமமான காரியம். இதை இப்போதைக்கு பரிசீலனை செய்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடைகளில் இப்போது 3 விதமான சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. சிவில் சப்ளைஸ் மூலமாகவும், அதேபோல் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம கூட்டுறவுச் சங்கங்கள் என்று 3 விதமான கடைகளில் 3 விதமான சம்பளங்களை இன்று அங்கு பணியாற்றுகின்ற பணியாளர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாற்றத்தைப் போக்குவதற்கு எல்லோருக்கும் ஒரே சீரான சம்பளத்தைக் கொடுக்கும் வகையில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நீங்கள் ஆட்களைத் தேர்வு செய்வீர்களானால் ஒரே சீரான சம்பளத்தைக் கொடுக்க அரசு முன்வரும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22 ஆயிரம் கடைகளில் ஒரு ஆயிரம் கடைகளை தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்தி வருகிறது. அங்கே சற்று கூடுதலாக சம்பளம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல மீதம் இருக்கிற கூட்டுறவுக் கடைகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நடத்துகின்ற கடைகள்தான் பெரும்பாலும் இருக்கின்றன. கொஞ்சம் கடைகளை, சில ஆயிரம் கடைகளை ஒல் சேல் ஸ்டோர்ஸ் மொத்த விற்பனை பண்டக சாலைகள் நடத்துகின்றன. அங்கே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நடத்துகின்ற கடைகளை விட சற்றுக் கூடுதலாக சம்பளம் வழங்கப்படுகிறது. எல்லோருக்கும் ஒரே மாதிரி சம்பளம் கொடுப்பது என்பது இப்போதைக்கு இயலாத காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 375, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

375—

சிமெண்ட் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முகமூடி வழங்கல்

*12821—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முகமூடி (Face Mask) வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொதுவாக சிமெண்ட் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணியாற்றுகின்ற தொழிலின் தன்மைக்கு ஏற்ப (Face Mask) வழங்கப்படுகிறது.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் சங்ககிரிக்கு அருகில் உள்ள சங்கர் சிமெண்ட் தொழிற்சாலை, திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூரில் அமைந்துள்ள சிமெண்ட் தொழிற்சாலை, காமராஜர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை கிய 3 தொழிற்சாலைகளிலும் பணியாற்றும் தொழி